DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

SC-112/2015

Deposition of witness for Prosecution / Defence / Court

Name : Mr. Jarouk Ali PW- 1

Father Name :

Adress :

Age/Sex :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21th day of July 2022.

---

**1, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

சம்பவம் நடந்த தேதி 15.10.2014 கிழமை ஞாபகம் இல்லை. அன்வருதினுடன் சேர்த்து 5 பேர் என்னுடன் ஜமாத்தில் இருந்து வெளியே போனார்கள். 5 நபர்களும் ஐந்து இரு சக்கர வாகனங்களில் போனார்கள். அன்வருதிருடன் சர்பூதின் உடன் சென்றார். எத்தனை பேர் அன்வருதினை அடித்தார்கள் என்றால் ஒரு நபர். ஒரு நபர் அடித்தார் மற்ற இரு நபர்கள் அடித்து கொல் என்று சொன்னார்கள். நான் புகாரில் இரும்பு பைப் வைத்து அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் கட்டை வைத்து அடித்ததாக சொல்லியுள்ளேன். புகாரில் கட்டை மற்றும் இரும்பு பைப் வைத்து அடித்துள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் கட்டை வைத்து அடித்ததாக சொல்லியுள்ளேன். நான் கொடுத்த புகாரில் ஆய்வாளர் மாற்றி எழுதச் சொன்னாரா என்றால் ஆமாம். எந்த விஷயத்தை மற்றும் மாற்றி எழுதச் சொன்னார் என்றால் அமானுல்லா மற்றும் சிவாவை இரு நபர்கள் அடித்ததாக புகாரில் எழுத வேண்டாம்

என்று ஆய்வாளர் சொன்னார். அன்வருதின் அப்பொழுது சுயநினைவோடு இருந்தாரா என்றால் இருந்தார். அடித்தவர்கள் பெயர்களை அவர் சொன்னாரா என்றால் சொன்னார். அவர் இறந்துபோன தேதி 27.10.2014. நான் கொடுத்த புகாருக்கும் நான் போலீஸாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் தெரியவில்லை. கட்டையின் நீளம் எவ்வளவு என்றால் 2 1/2 அடி கொண்டது. அன்வருதினுக்கும் மணி என்ற சுப்ரமணிக்கும் ஏதேனும் விரோதம் இருந்ததா என்றால் இல்லை. அன்வருதினுக்கும் சிவராமனுக்கும் விரோதம் இருந்ததா என்றால் இருந்தது. இது சம்பந்தமாக அன்வருதின் காவல்துறையில் காவலருக்கு புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. போலீஸார் விசாரணையில் அன்வருதின் சிவராமனை மிரட்டினார் என்று சொல்லியுள்ளேன். சம்பவத்திற்கு பிறகு இதயத்துல்லா என்னிடம் என்ன சொன்னார் என்றால் ஞாபகம் இல்லை. கார்பரேஷன் இடத்தில் சிவராமன் வசிக்கிறார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சிவராமன் வக்பு வாரிய சொத்தில் குடியிருந்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரி. பிள்ளையார் சதுர்த்தி திருவிழாவின் போது எனக்கும் சிவராமனுக்கும் தகராறு எதும் இல்லை என்றால் சரி.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். நான் மனிதநேய மக்கள் கட்சியில் மயிலாப்பூர் பகுதி தலைவராக உள்ளேன். நான் வக்பு வாரியத்தால் நியமிக்கப்பட்ட கமிட்டியில் துணை செயலாளராக உள்ளேன். வக்பு வாரியத்தில் எந்த பொறுப்பிலும் இல்லை. சம்பவ சமயத்தில் இறந்து போன அன்வருதின் மற்றும் சர்பூதின் கிளம்பிய பிறகு நான் 5 நிமிடம் கழித்து கிளம்பினோம். 5 நபர்களும் தனித் தனி இரு சக்கர வாகனத்தில் கிளம்பினோம். அன்வருதினுக்கு மயிலாபூர் மற்றும் நீலம்பாஷா தர்காவில் வீடு உள்ளது. இதயத்துல்லாவிற்கு நடேசன் ரோட்டில் வீடு உள்ளது. சர்பூதினுக்கு லாயிட்ஸ் ரோடில் உள்ள மக்காபூரில் வீடு உள்ளது. நாகூர் கனிக்கு ஐஸ்ஹவுஸ்ல் வீடு உள்ளது. எனக்கு மயிலாப்பூரில் உள்ள பெரிய பள்ளி தெருவில் வீடு

உள்ளது. நான் கொடுத்த புகாரில் மந்தவெளி பக்கத்தில் என் வீடு உள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் அது மயிலாபூரை சார்ந்தது. ஐந்து நபர்களும் நானும் 10 ஆண்டுகளாக நண்பர்களாக இருந்தோம். சம்பவம் நடந்த இடம் தர்காவில் இருந்து சுமார் 100 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்தது தர்காவில் இருந்து இடது புறம் நடந்தது. சம்பவம் நடக்கும் போது நான் அவ்விடத்தில் இருந்தேனா என்றால் சம்பவம் நடக்கும் போது நான் இல்லை. சம்பவம் நடந்து கொண்டிருந்த பொழுது நான் வந்தேன். அன்வருதினும் சர்பூதினும் முன்னாடி போய்கொண்டிருந்தார்கள் நான் பின்னாடி ஐந்து நிமிடம் கழித்து வந்தேன். நான் என் இரு சக்கர வாகனத்தில் வந்தேன் என்றால் சரி. நான் கொடுத்த புகாரில் இறந்து போன அன்வருதினை மூன்று நபர்கள் மாறி மாறி அடித்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.1 தான் நான் கொடுத்த புகார் என்றால் சரி. அதில் 2-வது பக்கத்தில் அன்வருதினை மூன்று நபர்கள் இரும்பு பைப் மற்றும் உருட்டு கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரி, ஆனால் நான் ஏற்கனவே கொடுத்த புகாரில் ஒரு நபர் அடித்ததாக சொல்லியுள்ளேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள். நான் போலீஸார் விசாரணையில் நடேசன் ரோடு லாயிட்ஸ் ரோடு சந்திப்பில் உள்ள கற்பக பழக்கடை முன்பு அன்வருதினை 3 நபர்கள் உருட்டு கட்டையாலும் இரும்பு பைப்பாலும் மாறி மாறி அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அன்வருதினுக்கு எத்தனை காயங்கள் இருந்தது என்றால் அவர் தலையில் 3 காயங்களும் கையில் ஒரு காயமும் இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் ஆட்டோ ஸ்டேன்ட் இருந்ததா என்றால் இருந்தது. சம்பவம் நடந்த நேரம் இரவு 11.30 மணி அச்சமயத்தில் யார் இருந்தார்கள் என்றால் சுமார் 50 நபர்கள் இருந்தார்கள். இறந்து போன அன்வருதினை சுமார் 10 அல்லது 15 நிமிடம் அடித்திருப்பார்கள். அவ்வளவு நேரம் நடந்த சம்பவத்தை நானோ பொதுமக்களோ தடுக்கவில்லையா என்றால் என்னை பார்த்த பிறகு தான் அவர்கள் ஓடிப்போனார்கள். அதனால் நான் சம்பவம் நடந்து முடிந்த பிறகு தான் போனேன் என்றால் இல்லை நடந்து கொண்டிருக்கும்போது தான் சென்றேன். 15 நிமிடம்

நடந்ததாக சொல்லும் சம்பவ சமயத்தில் நான் எப்பொழுது போனேன் என்றால் கடைசியாக போனேன். சம்பவம் நடக்கும் போது நான் போகவில்லை என்றும் அதனால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 2-வது எதிரியை தெரியுமா என்றால் தெரியும். அன்வருதினை அவர் இறப்பதற்கு முன்பாக தெரியுமா என்றால் தெரியும். சம்பவ இடத்தில் 2-வது எதிரி அமானுல்லா இருந்திருந்தால் நான் கொடுத்த புகாரில் அமானுல்லா இருந்ததாக கொடுத்திருப்பேன் என்றால் நான் முதலில் கொடுத்த புகாரில் அவர் பெயரை குறிப்பிட்டுள்ளேன். அ.சா.ஆ.1 புகாரில் பெயர் தெரியாத நபர் என்று நான் குறிப்பிட்டுள்ளது அமானுல்லா தான் என்றால் காவல் துறை சொல்லியதால் அவ்வாறு எழுதியுள்ளேன். அடிப்பட்ட அன்வருதினை மருத்துவமனைக்கு நாகூர் கனி மற்றும் சர்பூதின் அழைத்து சென்றுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. அவரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு அங்கு இருந்த நபர்களிடம் யார் அடித்தார்கள், அவர் பெயர் என்ன என்று விசாரித்தேன். அதன் பின் நான் நேராக காவல் நிலையம் சென்றேன். 2-வது எதிரியோ அவர் மனைவியோ என் மீது ராயப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. அன்வருதின் இறப்பதற்கு 3 மாதத்திற்கு முன்பு 2-ம் எதிரியின் மனைவி ஜெய்துன்பீ என் மீது ராயப்பேட்டை காவல் நிலையத்தில் நான் அவரை பணம் கேட்டு மிரட்டியதாக புகார் கொடுத்திருந்தார் என்றால் தெரியாது. அவர் என் மீது புகார் கொடுத்த காரணத்தினால் தான் நான் அன்வருதினின் இறப்பை சாதகம் ஆக்கி கொண்டு 2-வது எதிரியை பழிவாங்க வேண்டும் என்று இந்த வழக்கில் அவரை குற்றவாளியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் அன்வருதினுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டது என்றும் அவர் அந்த இடத்திலேயே சுயநினைவை இழந்துவிட்டார் என்றால் சரியல்ல. என்னை

போலீஸார் விசாரித்தபோது சம்பவ இடத்தில் சத்தம் கேட்டு அங்கு நின்றவர்கள் தடுத்து அவனை பிடிக்க ஓடியவர்களை பார்த்து தான் அன்வருதினை அடித்தது 3 நபர்கள் என்று கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீஸார் என்னை விசாரித்த போது அன்வருதினை

அடித்தது சுப்பிரமணியன் தான் என்று சொன்னேன் என்றால் சரி. போலீஸார் விசாரணையில் சுப்பிரமணியன் எதற்காக அன்வருதினை தாக்கினார் என்ன விரோதம் என்று எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. போலீஸார் விசாரணையில் நான் புகாரில் தெரிவித்தது போல் அமானுல்லா அல்லது சிவா ஆகியோரின் விரோதத்திற்காக அடித்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை போலீஸார் இரு முறை விசாரித்தார்கள். எப்பொழுது விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த அன்று விசாரித்தார்கள் மற்றும் அன்வருதின் இறந்த தேதியன்று விசாரித்தார்கள். என்னை போலீஸார் 2-வது முறையாக விசாரித்தபொழுது 3 நபர்கள் உருட்டுக் கட்டையாலும் இரும்பு பைப்பாலும் மாறி மாறி அடித்தார்கள் என்றும் அவர்கள் பெயர் தெரியாது என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. போலீஸார் விசாரித்தபொழுது அப்பொழுது சத்தம் கேட்டு அங்க நின்றவர்கள் தடுத்து அவனை பிடிக்க ஓடியவர்களை பார்த்து தான் நான் அன்வருதினை அடித்தது 3 நபர்கள் என்று கூறியுள்ளேன் என்றால் கூறவில்லை. போலீஸர் விசாரித்தபோது ஏற்கனவே நான் புகாரில் தெரிவித்தது போல் அமானுல்லா மற்றும் சிவாவின் விரோதத்திற்காக அடித்தாரா என்ற விவரம் தெரியவில்லை என்று கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. புகாரை நான் என் கைப்பட எழுதி கையொப்பம் போட்டேனா என்றால் இல்லை, காவல் ஆய்வாளர் சொல்லி நான் எழுதி கையொப்பம் போட்டேன். நடந்த சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் சம்பவத்தை பார்த்தவர்கள் சொன்னதை கேட்டு பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் 2-வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Dt. 21-07-2022. II Addl. District Judge**.**